**செய்தி வெளியீடு எண் : 1385** **நாள் : 11.08.2022**

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>உலக யானைகள் தின விழா, 2022</u>

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 12 ஆம் தேதி உலக யானைகள் தினம் கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் உள்ள யானைகளின் வாழ்விடங்களில் தமிழ்நாட்டின் வனப்பகுதிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பண்டைய தமிழ் இலக்கியத்தில் உள்ள யானைகள் பற்றிய குறிப்புகள் யானைகள், தமிழர் வாழ்வியலில் யானைகள் ஒரு அங்கமாக விளங்குகின்றன என்பதை தெரிவிக்கின்றன. யானைகள் பாதுகாப்பின உறுதி செய்ய யானைகளின் வாழ்விட பாதுகாப்பிற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் 4 யானைகள் காப்பகங்கள் உள்ளன. அதாவது, 1. நீலகிரி யானைகள் காப்பகம், 2. நிலம்பூர் யானைகள் காப்பகம், 3. ஸ்ரீவில்லிபுத்தூர் யானைகள் காப்பகம், 4. ஆனைமலை யானைகள் காப்பகம். 2017ஆம் ஆண்டு நடந்த யானைகள் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் சுமார் 2,700 யானைகள் உள்ளன.

உலக யானைகள் தினத்தை முன்னிட்டு சென்னை மெரினா கடற்கரை, கண்ணகி சிலை அருகில் உண்ணிச் செடிகள் எனப்படும் அந்நியக் களைத் தாவரங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட யானைகளின் சிற்பங்கள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படவுள்ளன. இந்த விழிப்புணர்வு நிகழ்வினை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் **திரு. க. இராமச்சந்திரன்** அவர்கள் ஆகஸ்ட் 12 ஆம் தேதி, மாலை 5 மணி அளவில் துவக்கி வைக்கிறார். இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் **திருமதி. சுப்ரியா ஸாஹூ, இ. ஆ.ப.,** மற்றும் திரு. சையத் முஜம்மில் அப்பாஸ், இ. வ .ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் வனத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

சிறப்புச் செயலாளர் (வனம்),
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்
மற்றும் வனத்துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in